# <u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 40/2025 | வா.சா. | : 1 |
| பெயர் | : அழகு | க/பெ. | : செல்வம் |
| தாலுகா | : நத்தம், திண்டுக்கல் | கிராமம் | : கோவில்பட்டி |
| தேதி | : 05.08.2026 | வயது | : 49/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

<u>வாதி தரப்பில் முதல் விசாரணை</u>

1. நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் இவ்வழக்கை பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விபரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 02.04.2007ம் தேதிய தாவா சொத்தையும், இதர சொத்துக்களையும் வாதிக்கு, 1ம் பிரதிவாதியின் தந்தை வழி பாட்டி எம்.கதிஜா பீவி, அத்தை நஜூமா பேகம், தந்தை அப்துல் கபூர் ஆகியோர் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் (ஆவண எண்.655/2007) வலைதள – சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும்,

2) 30.01.2016 மற்றும் 04.07.2025 ஆகிய தேதிகளில் தாவா சொத்திற்கு வாதி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா (பட்டா எண்.2629) (எண்ணம்–2) – கணினி நகல் வா.சா.ஆ.2 ஆகவும்,

3) 15.07.2025 ம் தேதிய தாவா சொத்திற்கும், இதர சொத்துக்களுக்கும் நத்தம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்கள் வழங்கிய புலவரைபடம் – சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும்,

4) 18.07.2025 ம் தேதிய தாவா சொத்திற்கும், இதர சொத்துக்களுக்கும் நத்தம் வட்டம், சாத்தாம்பாடி கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் வழங்கிய புலவரைபடம் – சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகவும்,

5) 15.02.2019 ம் தேதிய தாவா சொத்திற்கு வாதி பெயரில் ஏற்பட்டுள்ள கிஸ்து – அசல் வா.சா.ஆ.5 ஆகவும்,

6) 29.04.2016 ம் தேதிய தாவா சொத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு வாதி மின் இணைப்பு பெற விண்ணப்பம் கொடுத்து அதற்கு சாத்தாம்பாடி கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் ஆழ்துளை கிணறு உள்ளது என்று சான்று அளித்த அடங்கல் மற்றும் இதர ஆவணங்கள், மின்இணைப்பு பதிவு சான்றிதழ் உடன் தாக்கல் – கையிருப்பு நகல் வா.சா.ஆ.6 ஆகவும்,

7) 29.07.2025 ம் தேதிய வாதி பிரதிவாதிகள் மீது நத்தம் காவல் நிலையத்தில் நேரிலும், இணையதளம் மூலமாகவும் கொடுத்த புகார் மனு மற்றும் இணையதள புகாருக்கான இணையதள ஒப்புதல் அட்டை – கையிருப்பு நகல் வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 05.08.2026 கையெழுத்து செய்துள்ளார்.

Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,

Digitally signed by Tmt.J.Aafreen Begum., M.Com., L.L.M.,
Date: 2026.08.05 11:52:04 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.